Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 074 | சனிக்கிழமை Saturday | 13.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ரூ.134 கோடி மதிப்பீட்டில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம்

## முதலமைச்சர் விஜய் அறிவிப்பு




சென்னை: டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகளைப் பெற்றுப் பயனடையுமாறு முதல்வர் விஜய் வலியுறுத்தியுள்ளார். அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "தமிழ்நாட்டில் நெல் சாகுபடி, மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பிற்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் முக்கியப் பங்காற்றி வருகிறது. குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் குறுவை, கார் மற்றும் சொர்ணவாரிப் பருவங்களில் மேற்கொள்ளப்படும் நெல் சாகுபடியை ஊக்குவித்து, நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் 2026ம் ஆண்டில், 134.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சராசரியாக 52.72 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களின் அனைத்துப் பகுதிகளிலும்,கடலூர்,திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும் நெற்பயிரே முதன்மையாக சாகுபடி செய்யப்படுகிறது. டெல்டா மாவட்டங்களில் ஆண்டுக்கு 20.65 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், குறுவைப் பருவத்தில் மட்டும் சராசரியாக 5.14 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில், ஆண்டுக்கு 32.07 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், கார், குறுவை, சொர்ணவாரிப் பருவத்தில் மட்டும் சராசரியாக 5.48 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் தஞ்சாவூர்,நாகை,திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர் (சில பகுதி), திருச்சி (சில பகுதி), அரியலூர் (சில பகுதி) ஆகிய டெல்டா மாவட்டங்களில்குறுவை நெல் சாகுபடி செய்வதற்கு, மேட்டூர் அணை ஜூன் 12ம் நாளன்று திறப்பது வழக்கமாகும். இந்நிலையில், நடப்பு தென் மேற்குப் பருவத்தில் 'எல்நினோ' எனும் நிகழ்வால் மழை அளவு 90சதவீதத்திற்கும்குறைவாக இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையத்தால்அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது தென் மேற்குப் பருவமழை தாமதமாகும் நிலையில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாகவே உள்ளது. இதனால் தற்போது மேட்டூர் அணையில் நீர்மட்டம் 79.56 அடி (நீர் இருப்பு: 41.52 டிஎம்சி) மட்டுமே உள்ளது. எனவே, (ஜூன் 12) மேட்டூர் அணையைத் திறப்பதற்கான சாத்தியக் கூறு இல்லாதநிலை உள்ளது.

இதனால், காவிரி டெல்டாமாவட்டங்களில் இயல்பாக நெல் சாகுபடி மேற்கொள்ளும் 5 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. எனினும், டெல்டாமாவட்டங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் (Filter Points) மூலம் 3.55 லட்சம் ஏக்கர் வரை சாகுபடி மேற்கொள்ள இயலும் என்பதாலும், டெல்டா அல்லாத மாவட்டங்களில் தற்போது மழைப் பொழிவு சீராக இல்லாத நிலையிலும் விவசாயிகள் தங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட கார், குறுவை, சொர்ணவாரிப் பருவத்தில் நெல் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கவும், நெல் உற்பத்தியை அதிகரித்து,விவசாயிகள் பயனடையும் வகையில் 2026ம் ஆண்டிற்கான குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்என முதல்வர் விஜய் இன்று அறிவித்துள்ளார்.

இதன்படி, வடிமுனைக் குழாய்களைக் கொண்டு டெல்டாமாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யும்விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக 77.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும், டெல்டா அல்லாத மாவட்டங்களில் கார், குறுவை மற்றும் சொர்ணவாரி நெல் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக 57.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் என மொத்தம் 134.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில், நெல் இயந்திர நடவு, நேரடி நெல் விதைப்பிற்கான ஊக்கத்தொகை, உயிர் உரங்கள், நெல் நுண்ணூட்ட உரக்கலவை, விதை நெல் விநியோக மானியம் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட நெல் ரகங்களின் சான்று விதை உற்பத்திக்கான ஊக்கத் தொகை ஆகிய இனங்களுக்கு 134.83 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடாக டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களின் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம், இயந்திரமயமாக்கல் ஊக்குவிக்கப்படுவதுடன், நீர் மேலாண்மை மேம்படுத்தப்படும். தரமான விதைகள் மற்றும் தொழில் நுட்பங்கள் பயன்பாட்டின் மூலம் நெல் சாகுபடியின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுவதுடன், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி, மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த இத்திட்டம் உறுதுணையாக அமையும். வேளாண் பொறியியல் துறை வாயிலாக டெல்டாமாவட்டங்களில் உள்ள 2,325 கி.மீ. நீளமுள்ள "சி" மற்றும் "டி" வாய்க்கால்கள் 10 கோடி ரூபாய் செலவில் தூர் வாரப்பட்டுள்ளன. மேலும், நீர்வளத்துறை மூலமாக 100 கோடி ரூபாய் செலவில் 4,971 கி.மீ. நீளமுள்ள "ஏ" மற்றும் "பி" வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டு தற்போது வரை 97 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளன.

மேலும்,குறுவைசாகுபடிக்கு 10,714 மெட்ரிக் டன் நெல் விதைகள் மற்றும் 4.02 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தடையில்லா மும்முனை மின்சாரம் நாளொன்றுக்கு 18 மணி நேரம் வழங்கப்படும்.

எனவே, டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகளைப் பெற்றுப் பயனடையுமாறு முதல்வர் விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்" என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "நிதி ஆயோக் கூட்டத்தில் திமுக சாதனைகள் மீது தவெக ஸ்டிக்கர்" எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி கண்டனம்



சென்னை: "நிதி ஆயோக் கூட்டத்தில் திமுக அரசின் சாதனைகளின் மீது முழுக்க முழுக்க ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது சோ:ஃபா மாடல் அரசு" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்து உள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தேர்தல் பிரச்சாரத்தின் போது, தமிழ்நாடு ஏதோ படுகுழிக்குள் விழுந்தது போலவும், கடனில் தத்தளிப்பதாகவும் போலி கதைகளை (Fake Narratives) உருவாக்கிய இன்றைய முதல்வர், டெல்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் சாதனைகள் என்று பெரும் பட்டியலை வாசித்து இருக்கிறார்.

இந்தியாவிலேயே 2 ஆவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு இருக்கிறது. இந்தியாவில் பணிக்குச் செல்லும் பெண்களில் 42 சதவிகிதம் மகளிர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். பெண் கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றில் முன்னேற்றம், மகளிர் சுய உதவி குழுக்களின் வளர்ச்சி என்று முதல்வர் பேசி இருக்கிறார்.

இவை எல்லாம் அவருடைய ஒரு மாத கால 'சோ:ஃபா மாடல்' ஆட்சியில் நடந்த சாதனைகளா? அல்லது, 5 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனையா? என்பதை முதல்வர் விளக்க வேண்டும்.

தேர்தலுக்கு முன்பு 'நீட் மட்டும் தான் உலகமா?' என்று கேட்டவர், இப்போதுநீட்விலக்குகேட்டு, அவர்பேசியதற்குஅவரே மறுப்பு கூறியிருக்கிறார். டெல்லி வரை சென்றவர், நிதி ஆயோக் கூட்டத்திலோ, அல்லது கர்நாடகாவில் ஆட்சி செய்யும் அவருடைய புதிய கூட்டணிக்கட்சியிடமோ மேகேதாட்டு பிரச்சினை பற்றி வாய் திறக்காமல், நமக்கெதுக்கு வம்பு என்று அமைதியாக திரும்பி இருக்கிறார்.

மொத்தத்தில், நிதி ஆயோக் கூட்டத்தில் நம் கழக அரசின் சாதனைகளின் மீது முழுக்க முழுக்க ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது சோ:ஃபா மாடல் அரசு. பொய்களையும், அவதூறுகளையும்அள்ளிவீசி,மக்களை ஏமாற்றி, நீங்கள் பெற்றிருக்கும் போலி வெற்றி நீண்ட நாள் நிலைக்காது சி.எம் சார். உண்மை நிச்சயம் வெல்லும்" இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.

**வரி விளம்பரங்கள்**

தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் / ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# 'நான் அரசியலுக்கு வரலாமா?' மக்களிடம் ராகவா லாரன்ஸ் கருத்து கேட்பு

சென்னை: "நான் அரசியலுக்கு வரலாமா? வேண்டாமா? அதற்கான தகுதி எனக்கு உள்ளதா" என மக்களிடம் கருத்து கேட்டுள்ளார் நடிகர் ராகவா லாரன்ஸ்.

திருச்சி கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் அவர் போட்டியிட உள்ளதாக பரவிவரும் தகவலுக்கு விளக்கம் தருவதாககடந்தஞாயிற்றுக்கிழமை கூறியிருந்தார். அதன்படி இன்று சமூக வலைதளத்தில் அவர் வீடியோ ஒன்றை வெளியிட்டார். சுமார் 18 நிமிடங்கள் ரன் டைம் கொண்ட இந்த வீடியோவை குட்டி கதையுடன் அவர் தொடங்கினார். "திருச்சி கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நான் போட்டியிட வேண்டுமென்றால் நான் முதலில் அரசியலுக்குள் வர வேண்டும். நான் செய்து வரும் சமூக சேவை குறித்து நீங்கள் அனைவரும் அறிவீர்கள். என்னால் முடிந்த வரையில் அந்தப்



பணியை மேற்கொண்டு வருகிறேன். அதன் பின்னர் ஜல்லிக்கட்டு போராட்டம் நடைபெற்றது.அதில் பங்கேற்றேன்.

பின்னர் அரசியல் கட்சித் தலைவர் சீமான் அண்ணன் ஒரு விமர்சனம் வைக்கிறார்.அதற்கு நான் பதில் அளித்திருந்தேன். அதுதான் அரசியலில் எனக்கு தொடக்கப்புள்ளி எனக் கருதுகிறேன். தொடர்ந்து ரஜினி சார் அரசியலுக்கு வரக் கூடாது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கு நான் ஆதரவு தரும் வகையில் செயல்பட விரும்பினேன். அப்போது பெரிய எதிர்பார்ப்பு இருந்தது.

அது குறித்து எங்கள் வீட்டில் சொன்ன போது அரசியலுக்குவரவேண்டாம் என என் அம்மா சொன்னார். அதன் பின்னர் கரோனா தொற்று பரவல் ஏற்பட்டது.அந்தச் சூழலில் தான் அரசியலுக்கு வரவில்லை என ரஜினிகாந்த் அறிவித்தார். அந்தச் சூழலில் நண்பர் விஜய் அரசியலுக்கு வருவதாக தெரிவித்தார். அவரது திரை பயணத்தில் இணைந்து நானும் பணியாற்றி உள்ளேன். அவர் சிறந்த உழைப்பாளி. அது குறித்து அம்மாவிடம் மீண்டும் சொன்னேன். அப்போதும் என் அம்மா அரசியல் வேண்டாம் எனச் சொல்லிவிட்டார். அது குறித்து எனது நண்பர்களுடன் பேசி இருந்தேன்.

தேர்தல் முடிந்து முடிவுகள் வெளியானதும் சரித்திரத்தை புரட்டி போடுகிறார். அது குறித்து அம்மாவிடம் சொன்னேன். நண்பரின் அந்த முகத்தை நம்பி வாக்களித்து உள்ளார்கள் என்று சொன்னேன். நல்லவர்களுக்கு மக்கள் வாய்ப்பு தருவார்கள் என்று சொன்னேன். அம்மாவும் அதை ஏற்றுக் கொண்டார், 'நீ நெனச்சத பண்ணு' என அம்மா சொன்னார்.

நான் அரசியலுக்கு வரலாமா? என எனது ரசிகர்களிடமும், மக்களிடமும் கேட்க விரும்புகிறேன். அதற்கான தகுதி எனக்கு உள்ளதா?. அதை கமெண்ட் மூலம் தெரிவியுங்கள். உங்கள் முடிவுக்காக நான் காத்திருக்கிறேன்" என அந்த வீடியோவில் ராகவா லாரன்ஸ் கூறியுள்ளார்.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### தொடர் மின்தடையால் கருகும் பயிர்கள்:

# விவசாயிகளை காக்க தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தல்

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலவி வரும் தொடர் மின்தடையால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாகபாதிக்கப்பட்டுள்ளதாகவும்,இது குறித்து தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தேசிய முற்போக்கு திராவிட



கழகத்தின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலூர் மாவட்டம், விருத்தாசலம் மற்றும்அதனைச்சுற்றியுள்ளபகுதிகளில்தொடர்ந்து மின்தடை நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனால் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்குப் போதிய நீர் கிடைக்காமல் பயிர்கள் வாடி வருவதாகவும், இதன் விளைவாக விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பையும் வேதனையையும் சந்தித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட கடன் தள்ளுபடி முழுமையாகச் செயல்படுத்தப்படாத நிலை ஒருபுறம் இருக்க, மறுபுறம் மின்தடையால் விவசாயிகள் பாதிக்கப்படுவது, "உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி" என்பதைப் போல் விவசாயிகளின் நிலையைப் பரிதாபமாக மாற்றியுள்ளதாக அவர் வேதனை தெரிவித்துள்ளார். எனவே,விவசாயிகளின்நலனைக்கருத்தில்கொண்டு, இந்த விவகாரத்தில் தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டுத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரேமலதா விஜயகாந்த் தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



### உலக குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினத்தையொட்டி

# அன்னை வயலெட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் விழிப்புணர்வு பேரணி; 100 க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

கோவை சுப்பிரமணியம் பாளையம் அன்னை வயலெட்மெட்ரிக்மேல்நிலைப் பள்ளியில் உலக குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினத்தை ஒட்டி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் கைகளில் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு குறித்தானவிழிப்புணர்வு வாசகங்களை ஏந்தி பேரணியில் கலந்து கொண்டனர்.

ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி உலக குழந்தை தொழிலாளர் ஒழிப்புதினமாககடைபிடிக்கப்பட்டு வரு கிறது.

இந்த நிலையில் கோவை சுப்பிரமணியம் பாளையத்தில் செயல்பட்டு வரும் அன்னை வயலட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் உலக குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பள்ளியின் செயலர் என் ஆர் டி பிரேம்குமார் மற்றும் துணைச் செயலர் டாக்டர் பி இ ஆர் பிரேம்சந்த் ஆகியோரின் ஆலோசனைப்படி நடைபெற்ற இந்த விழிப்புணர்வு பேரணியில் பள்ளியின் தமிழாசிரியர் கோமதி குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு குறித்து மாணவ மாணவிகளிடையே உரையாற்றினார். தொடர்ந்து பள்ளியின் முதல்வர் அக்ரியா ஜான்சி கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தார்.

பேண்ட் வாத்தியத்துடன் தொடங்கிய இப்பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கைகளில் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு குறித்தான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி பேரணியாக சென்றனர். பள்ளியில் தொடங்கிய இப்பேரணி சுப்பிரமணியம் பாளையம் சாலை வழியாக சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்று மீண்டும் பள்ளியை வந்தடைந்தது.

இப்பேரணியில் மாணவ மாணவிகளில் சிலர் ஆசிரியர், மருத்துவர், செவிலியர், விவசாயி, தீயணைப்பு படை வீரர் போன்று வேடமணிந்து கலந்துகொண்டனர். முன்னதாக உலக குழந்தை தொழிலாளர் ஒழிப்பு குறித்து பள்ளியில் பயிலும் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவமாணவிகளுக்கு கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இப்பேரணியில் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்கள் அன்பு வடிவு, மேரி ரமணி, ரம்யா, சந்தியா, கோமதி, கௌசல்யா, செரிஃபா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் பெரியகுளம் வடகரை பட்டாப்புளி தெரு ஸ்டேட் பேங்க் காலனி ஸ்ரீ காளியம்மன் ஸ்ரீ முத்தையா ஸ்ரீ கருப்பசாமி திருகோவில் ஆண்டு வைகாசி உற்சவ ஊர் திருவிழா மிக விமர்சையாக நடைபெற்றது இவ்விழாவில் ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து காப்பு கட்டி முளைப்பாரி, மற்றும் பால்குடம் எடுத்து நேத்தி கடனை மக்கள் செலுத்தினார்கள். மேலும் கரகாட்டம், ஆடலும் பாடலும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது அனைத்து பக்தர்களுக்கும் அன்னதான நிகழ்ச்சியில் அறுசுவையுடன் உணவு ஊர் நிர்வாகத்தின் சார்பாக வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதனை கோவில் நிர்வாக குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.



கடலூர் மேற்கு மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, வேப்பூர் அரசு பள்ளி மாணவர்களுக்கு இந்திய சமூக ஆய்வு மையம் மற்றும் விஜயபாஸ்கர் அறக்கட்டளை இணைந்து வெளியிட்ட "தமிழ்நாடு தந்த அண்ணா!","ஏன்?என்று கேட்க சொன்னவர்" உள்ளிட்ட பகுத்தறிவு படக்கதை நூல்களின் 100 தொகுப்புகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் குணசேகரன் நூல்களை மாணவர்களுக்கு வழங்கினார். உடன் ஒன்றிய பொறியாளர் அணி துணை அமைப்பாளர் செல்வரசன், வேப்பூர் இளைஞரணி நிர்வாகிகள் சபரிநாதன், மாரிமுத்து, கேஷவ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.



குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தேனியில் கையெழுத்து இயக்க விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. குழந்தை தொழிலாளர் ஒழிப்பு முறை அவசியம் குறித்து உறுதிமொழி எடுத்து கையெழுத்திட்டு விழிப்புணர்வு மனிதநேய காப்பகம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்



மதுரை திருமங்கலம் நகராட்சி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் திமுக கவுன்சிலர்கள்சிலர் திருமங்கலம் நகராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்குகாங்கிரஸ் எம்பி மாணிக்க தாகூர் எந்த நிதியும் ஒதுக்கவில்லை என குற்றச்சாட்டு வைத்துள்ளனர்.இது தொடர்பான வீடியோ வைரலானதை தொடர்ந்து மாணிக் தாகூர் எம்பி உத்தரவின்பேரில் இன்றைக்கு தெற்கு மாவட்டம் காங்கிரஸ் தலைவர் உலகநாதன் தலைமையில் நகராட்சி வாசலில் முன்பு திமுக கவுன்சிலர்களை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நகர்மன்ற தலைவருக்கு எதிராகவும் திமுக கவுன்சிலர்களுக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பினர் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் உலகநாதன் திருமங்கலம் நகராட்சி பகுதியில் திமுக கவுன்சிலர் வார்டுகளுக்கு மட்டும் சமுதாயக்கூடம்குடிநீர் தொட்டிகள் என ஒரு கோடி ரூபாய்க்கு திட்டங்கள் செய்து கொடுத்துள்ளதாகவும் திமுகவினர் தவறான தகவல்களை பரப்பி வருவதாக தெரிவித்த அவர் திமுக கவுன்சிலர்கள் பலரும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் அவர்கள் செய்த ஊழல்கள் விரைவில் வெளிச்சத்துக்கு வரும் என தெரிவித்தார். ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கவுன்சிலர் அமுதாசரவணன், நகர தலைவர் கரிசல்பட்டி சௌந்தரபாண்டி,வட்டாரத் தலைவர்கள் பாண்டியன், முருகேசன், வீரபத்திரன், தளபதிசேகர், முத்துப்பாண்டி,புதுராஜா நகர நிர்வாகிகள் காளியப்பன், சங்கரலிங்கம்,சலாம்அப்துல், பிருதிவிராஜ்,பத்மாஉள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

### அனைவருக்கும் சொந்த வீடு

# முதலமைச்சர் விஜய்க்கு இந்திய ஜீவா கம்யூனிஸ்ட் கட்சி நன்றி

அனைவருக்கும் சொந்த வீடு என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துக்




கொள்கின்றோம் எங்களது கட்சியின் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட தமிழக முதல்வர் சி ஜோசப் விஜய் அவர்களுக்கு நன்றி! நன்றி! நன்றி!

தமிழ்நாட்டில் சொந்த வீடு இல்லாத ஏழை மக்கள்அனைவருக்கும்வீடுஎன்றதிட்டத்தை கொண்டுவரவேண்டும்என்றுமுதல்வருக்கு கோரிக்கைகடிதம்2/6/2026ஆம்தேதி அன்று அனுப்பினோம்.அக் கோரிக்கை கடிதத்தை ஏற்றுக் கொண்ட முதல்வர் விஜய் அவர்கள் டெல்லியில் பிரதமர் மோடி அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்ட நமது முதல்வர் விஜய் அவர்கள் ஆற்றிய உரையில் அனைவருக்கும் வீடு என்ற கனவை நிறைவேற்ற மத்திய அரசிடம் நிதி உதவி வழங்க வேண்டும் என்று கேட்டிருப்பதை வரவேற்கின்றோம். அனைவருக்கும்சொந்தவீடுஎன்றநிலையை மாண்புமிகு முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் உருவாக்கி சட்டம் இயற்றி சொந்தமாக வீடு, நிலம் வாங்க முடியாத ஏழை மக்களின் சொந்த வீடு என்ற கனவை விரைவில் நிறைவேற்றிட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்திய ஜீவா கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும் தமிழ்நாடு நிலமற்றோர் வாடகை வீடுகளில் குடியிருப்போர் வாழ்வுரிமை சங்கத்தின் சார்பாகவும் கேட்டுகொண்டதின் படி முதல்வர் அவர்கள் எடுத்த முயற்சிக்கு வாழ்த்துக்களையும் நன்றியையும் வீடு இல்லாதஏழைமக்களின்சார்பாகதெரிவித்து கொள்கிறோம் இங்கனம்

G.A சுபஹான் மாநில பொது செயலாளர் இந்திய ஜீவா கம்யூனிஸ்ட் கட்சி,ரா.தனபால்

பொது செயலாளர் நிலமற்றோர் வாடகை வீடுகளில் குடியிருப்போர் வாழ்வுரிமை சங்கம்

# வேப்பூர் அருகே ரேஷன் கடை திறக்க ஜமாபந்தியில் பொதுமக்கள் கோரிக்கை



கடலூர் மாவட்டம் வேப்பூர் தாலுகாவிற்கு உட்பட்ட இலங்கியனூர் கிராமத்தில், கடந்த 10.03.2026 அன்று திறக்கப்பட்ட புதிய நியாய விலைக் கடை கட்டிடத்தில் மூன்று மாதங்கள் ஆகியும் இன்னும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படவில்லை என்றும், கடை தொடர்ந்து ஒதுக்குப்புறமாக உள்ள பழைய அரசு கட்டிடத்திலேயே செயல்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் தரப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, மக்களின் நலன் காக்கும் வகையில் உடனடியாக புதிய கட்டிடத்தில் ரேஷன் பொருட்களை வழங்க உரிய நடவடிக்கைஎடுக்கக்கோரி, கிராம பொதுமக்கள் சார்பாக முன்னாள் ஊராட்சிதுணைத்தலைவர் பிரேம்குமார் என்பவர் வேப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட கலால் உதவி ஆணையரும் வருவாய் தீர்வாய அலுவலருமான ராணி அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தார். அப்போது, வேப்பூர் வருவாய் வட்டாட்சியர் செந்தில் வேல் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### கோவை செல்வபுரம் பகுதியில் உள்ள குடிசை மாற்று வாரிய மண்டல அலுவலகமான,

# தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் தொடர்ந்து முறைகேடுகள் நடந்து வருகின்றதாக தமிழக முற்போக்கு மக்கள் கட்சி கண்டனம்

கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகம் அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணைத் தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவர் தமிழக முதல்வருக்கு புகார் மனு ஒன்றை அளித்துள்ளார். அந்த மனுவில், கோவை மாவட்டத்தில், ஏழை எளிய மக்களுக்கு கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக இலவச சட்ட ஆலோசனை மற்றும் சமூக சேவை செய்து வருகின்றதாகவும், கோவை செல்வபுரத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் செயல்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் உள்ள 11 தாலுகாவிற்கும் இதுதான் தலைமை அலுவலகம் ஆகும். கோவையில் பல இடங்களில் இந்த அலுவலகம்மூலம்அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது. குறிப்பாககீரணத்தத்தில்மூன்று திட்டப் பகுதிகள் உள்ளது. கோவை செல்வபுரம், கல்லாமேடு, எழில் நகர், தெற்கு பேரூர், வடக்கு பேரூர், உக்கடம் புல்லுக்காடு, வெள்ளலூர், கோவைப்புதூர்,



குளத்துப்பாளையம், அறிவொளி நகர், மணி நகர்,குப்பிச்சிப்பாளையம், பொள்ளாச்சி,வால்பாறை, அன்னூர் இப்படி இன்னும் பல பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு பயனாளர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இந்த அலுவலகத்தில் ஒப்பந்ததொழிலாளர்கள் 25 பேர் பணியாற்றி வருகின்ற நிலையில், மூன்று வருடத்திற்கு மேல் இதே இடத்தில் தான் பணி மாற்றம் செய்யாமல் இருந்து வருகிறார்கள். வீடு ஒதுக்கீடு கேட்டு விண்ணப்பம் செய்தால்,மனுவை வாங்கிக் கொண்டு ரசீது தர மறுக்கிறார்கள். விண்ணப்பம் வழங்கியவர்கள் அலுவலகத்திற்கு சென்று கேட்டால் சரியாக பதில் சொல்வதில்லை. அதிகாரிகள் இல்லையென்று வேண்டுமென்றே பொய் சொல்லி துரத்தி விடுகிறார்கள். குறிப்பாக இந்த அலுவலகத்தில் அரசியல் தலையீடு மிகவும் உள்ளது. செல்வபுரத்தில் பகுதிச் செயலாளராக இருக்கும் திமுகவை சேர்ந்த நபர் அங்குள்ள அதிகாரியை கைக்குள் போட்டுக் கொண்டு பகுதிச் செயலாளர் சொல்வதை தான் அதிகாரிகள் கேட்டு முறைகேடாக வீட்டை ஒதுக்கீடு செய்கிறார்கள் எனவே, கோவை செல்வபுரத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புறவாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் தொடர்ந்து முறைகேடுகள் நடந்து வருகிறுது எனவும், அங்கு நடக்கும் ஊழலை கண்டுபிடித்து மூன்று வருடத்திற்கு மேல் பணிபுரியும் ஊழியர்களை உடனடியாக பணிமாற்றம் செய்து ஊழலை தடுக்கும் படியும் பொதுமக்கள் சார்பாகவும், எனது கட்சியின் சார்பாகவும் தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று மனு அளித்துள்ளார்.

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலினிடம் 11 சட்டமன்ற தொகுதி களஆய்வு அறிக்கையை தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி வழங்கினார்



தூத்துக்குடி கடலூர், நாகை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 11 சட்டப் பேரவைச் தொகுதிகளின் கள ஆய்வு அறிக்கையை மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, திமுக தலைவர் மு.க. ஸ்டாலினிடம் வழங்கினார். கடந்த மே மாதம் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக வெற்றி வாய்ப்பை இழந்தது குறித்து 234தொகுதியிலும் களஆய்வு செய்ய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் குழுவை நியமித்திருந்தார். அதன்படி, கடலூர் கிழக்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் உள்ள 11 சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் கள ஆய்வு செய்ய, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில தகவல் தொழில்நுட்ப அணியைச்சேர்ந்தஇசை ஆகியோர் நியமிக்க ப்பட்டிருந்தனர். இவர்கள் 11தொகுதிகளிலும்நேரடியாகதிமுகநிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை சந்தித்து திமுக கூட்டணியின் தோல்விக்கான காரணங்கள், அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், கட்சியின் வளர்ச்சி திட்டங்கள் குறித்து கருத்துகளை கேட்டறிந்தனர். இதைத் தொடர்ந்து களஆய்வின் அறிக்கையை, ஸ்டாலினிடம் மாநகராட்சி மேயர் பெரியசாமி, இசை ஆகியோர் வழங்கினர். அப்போது அவர்ளிடம் திமுக தலைவர் ஸ்டாலின் கருத்துகளையும் கேட்டறிந்தார்.



ஈரோடு மாவட்டம் அரச்சலூரில் வரும் ஜூலை.17ம் தேதி சுதந்திர போராட்ட வீரர் மாவீரன் பொல்லானின் 221வது நினைவு நாள் விழா நடைபெறுகிறது. இதனையொட்டி, சமூக நீதி மக்கள் கட்சி மற்றும் மாவீரன் பொல்லான் பேரவையின் நிறுவன தலைவர் ஈரோடு வடிவேல்ராமன் சென்னை தலைமைச் செயலகத்தில் அமைச்சர் விஜய்பாலாஜியை நேரில் சந்தித்து, இவ்விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

### நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம்

## சின்னப்பநாயக்கன்பாளையம் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு பாராட்டு விழா



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சின்னப்பநாயக்கன்பாளையம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளியளவில் முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவர்களுக்கும்,தங்களது பாடப்பிரிவில் 100 சதவீதம் தேர்ச்சி பெறவைத்த ஆசிரியர்களுக்கும் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின்* சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் தலைவர் சீனிவாசன் தலைமை வகித்தார்.

தளிர்விடும் பாரதம் *செயலாளர் பிரபு* அனைவரையும் வரவேற்றார்

விழாவில் மோகன்ராஜ், செந்தில்குமார், வரதராஜன், சிரிப்பு யோகா கோபால் ஆகியோர்முன்னிலைவகித்தனர். சிறப்பு விருந்தினராக இந்து சமய அறநிலைய துறை செயல் அலுவலர் குணசேகரன், நகர்மன்ற உறுப்பினர் இனியா ராஜூ, அனைத்து வணிகர் சங்கங்களின்பொருளாளர் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்து சமய அறநிலைய துறை செயல் அலுவலர் குணசேகரன் பேசும்போது, இங்கு சிறப்பு விருந்தினராக நான் நிற்கிறேன் என்றால் எனது கல்வி தான் முக்கிய காரணம்* எனவே மாணவர்களாகிய நீங்கள் ஆசிரியர் வழிகாட்டுதலின் படி நன்றாகபடித்துநீங்களும் *வாழ்வில் உயர் நிலைக்கு வரவேண்டும் என்று வாழ்த்தி பேசினார்.

விழாவில் பள்ளி அளவில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவர்கள் கௌதம், கிருஷ்ணாவருண், நவீன்குமார் ஆகியோருக்கும்,அவர்தம்பாடங்களில் 100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு அளித்த ஆசிரியர்கள் பழனிவேல்,சந்திரசேகர், ஷீரின் சித்தாரா பானு ஆகியோருக்கு கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விழாவில் இருபால் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் தலைமை ஆசிரியர் மலர்விழி அனைவருக்கும் நன்றி கூறினார்.

### தென்காசி மாவட்டம் குற்றாலத்தில்

## தமிழ்நாடு நகராட்சி, மாநகராட்சி பணியாளர்களின் குழந்தைகளுக்கான 16வது ஆண்டுக்கான பரிசளிப்பு விழா

### கலெக்டர் ரஞ்சித்சிங் பங்கேற்பு



தமிழ்நாடுநகராட்சி, மாநகராட்சி பணியாளர்களின் குழந்தைக ளுக்கான 16 வது ஆண்டுக்கான பரிசளிப்பு விழா இந்த ஆண்டு அடுத்த மாதம் 19 ஆம் தேதி குற்றாலத்தில் வைத்து நடைபெற உள்ளது இது பற்றிய விவரம் ஆவது தமிழ்நாடு நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்களின் குழந்தைக ளுக்கான பரிசளிப்புவிழாகுற்றாலத்தில் நடைபெற உள்ளது மாநகராட்சி மற்றும் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின்குழந்தைகள் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ மாணவிகளுக்கு ஆண்டுதோறும் பரிசளிப்பது வழக்கம் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது இந்த ஆண்டு தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் ஜூலை 19ஆம் தேதி அன்று நடைபெற உள்ளது. இந்த விழாவில்சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவராக புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட திருமிகு.ரஞ்சித்சிங் அவர்கள் கலந்து கொண்டு பரிசளிப்பு விழாவில் சிறப்பிக்கின்றார் பரிசளிப்பு விழாவிற்கான அழைப்பிதழை அழைப்புவிடுக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் மாவட்ட ஆட்சியர் அவர்களை நேரில் சந்தித்து நகராட்சி, மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் மற்றும் அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் திரு.வ.பாலசந்தர், (திருநெல்வேலி மாநகராட்சி சுகாதார அலுவலர் ) தென்காசி நகராட்சி சுகாதார அலுவலர் திரு.முகமது இஸ்மாயில், விழாக் குழு தலைவர் தென்காசி . கணேசன், பொருளாளர் கடையநல்லூர் வை.. மாரியப்பன்,"பணியாளர்களின் குரல்" ஆசிரியர் இரா.சீ 1த்தாராமன் உள்ளிட்டோர் அழைப்பிதழை வழங்கினர் அழைப்பிதழ் பெற்றுக்கொண்டமாவட்ட ஆட்சித்தலைவர்திருரஞ்ஜித் சிங்அவர்கள் நிகழ்ச்சியில் உறுதியாக கலந்து கொண்டு பரிசளிப்பு விழாவில் சிறப்பு செய்வதாக தெரிவித்துள்ளார் மேலும்பரிசளிப்பு விழா ஒருங்கிணைப்பாளர்கள் கூறியதாவது நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலகங்களில்பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் குழந்தைகள் நடந்து முடிந்த 2025 –26 ஆம் ஆண்டு நடைபெற்றபத்தாம்வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளின் மதிப்பெண் பட்டியலை வரும் 15 ஆம் தேதிக்குள் அனுப்பி வைத்து விழா குழுவினருக்கு ஒத்துழைப்பு வழங்க கேட்டுக் கொண்டனர்.

### மதுரை வெள்ளைக்கல் குப்பை கிடங்கு பகுதியில்

## கழிவு நீர் முறையாக சுத்திகரிக்கப்படவில்லை; விசாயிகள் கையில் கீரை கட்டுடன் சாலை மறியல்



திருப்பரங்குன்றம் அருகே உள்ள வெள்ளைக்கல் குப்பை கிடங்கு பகுதியில் சேகரிக்கப்பட்டு வருகிறது இந்த குப்பை கிடங்குக்கு அருகே சுமார் 400 ஏக்கர் பரப்பளவில் அந்த பகுதி விவசாயிகள் அகத்திக்கீரை, பொன்னாங்கண்ணி, தண்டு கீரை, முருங்கைக்கீரை கத்திரிக்காய், வெண்டைக்காய், மருதாணி போன்றவை விவசாயம் செய்து வருகின்றனர். இங்கு விளைவிக்கும் கீரைதான் மதுரை மாநகர் முழுவதும் கொண்டு செல்லப்படுகிறது. இந்த நிலையில் கடந்த 80 வருடங்களுக்கு மேலாக மதுரை மாநகரில் இருந்து வெளியேறும் கழிவு நீர் நிலம் வழியாக இந்த வெள்ளக்கலுக்கு வந்தடையும் அந்த நீரினை கொண்டு விவசாயம் செய்து வந்தனர். கழிவு நீரால் விவசாயம் செய்யும் பொருட்கள் நோய் தொற்று பரவும் என அதிகாரிகள் தெரிவித்து இந்த பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு நீரை சுத்திகரித்து விவசாயத்திற்கு தருவதாக தெரிவித்துள்ளனர். ஆனால் இந்த பகுதியில் செயல்பட்டு வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முறையாக செயல்படாமல் குறைந்த அளவு தண்ணீர் மட்டும் விவசாயத்திற்கு தருவதாகவும் 400 ஏக்கர் நிலம் விவசாயம் செய்ய முடியாத சூழல் உள்ளதாகவும், கழிவு நீரை முறையாக சுத்திகரிக்காமல் அவை அருகில் உள்ள அய்யன் பாப்பாக்குடி கம்மாய் மற்றும் ஐவக வேந்தல் கண்மாயில் கலக்கிறது

இதனால் நிலத்தடி நீர் மாசடைகிறது என விவசாயிகள் குற்றச்சாட்டு வைக்கின்றனர். இது குறித்து அண்மையில் மதுரை மாநகராட்சி துணை மேயர் தலைமைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை காகன் தீப் சிங் ஐஏஎஸ் அவர்களை சந்தித்து 15 வருடங்களாக செயல்படும் சுத்திகரிப்பு நிலையம் மாதம் 15 லட்சம் மின்சார கட்டணம் செலுத்தப்படுகிறது ஆனால்கழிவுநீர் முறையாக சுத்திகரிக்கப்படவில்லை எனவே நடவடிக்கை எடுக்கக்கோரி மனு அளித்ததாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மதுரையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் சந்தப்பேட்டை, முத்துப்பட்டி பகுதிகளில் உள்ள கிணறுகளில் சேமிக்கப்பட்டு குழாய் வழியாக வெள்ளக்கல் வந்தடையும் இங்கு விவசாய நிலத்திற்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் குழாய் மூலம் நீர் பிரியும் இடத்தில் விவசாய நிலத்திற்கு செல்லும் குழாயை அடைத்து ஒரு பக்கமாக கழிவுநீர் கிணறுகளுக்கு திருப்புவதற்கு மாநகராட்சி அதிகாரிகள் வெள்ளக்கலுக்கு வருகை தந்து பணியை தொடங்கினர். அப்போது அதனை எதிர்த்து அந்தப் பகுதி விவசாயிகள் கையில் கீரை கட்டுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். உடனே காவலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்ய முயற்சித்ததால் அந்த இடம் பரபரப்பானது, இந்த பகுதி விவசாயிகளை தொந்தரவு செய்யக்கூடாது என மாவட்ட நீதிமன்றத்தில் தீர்ப்பு உள்ளதாகவும் விவசாயத்திற்கு கழிவு நீர் கொடுக்காவிட்டாலும் சுத்திகரிக்கப்பட்ட நீரை யாவது அதிகமாக கொடுங்கள் இல்லை என்றால் எங்கள் விவசாயம் பாதிப்படைவதோடு மட்டுமல்லாமல் விவசாயத்தை நம்பி உள்ள 300-க்கும் மேற்பட்ட குடும்பத்தின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்கின்றனர்.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டதற்கு கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் விவசாய நிலத்திற்கு செல்வதால் அந்த விவசாயப் பொருட்களில் நோய் தொற்று ஏற்படும் அபாயம் இருப்பதாகவும், இதனால் தண்ணீரை நிறுத்தப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை குழாய் மூலமாக அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தனர்.

ஆனால் அந்த தண்ணீர் பத்தாது வீணாக கண்மாயில் கலக்கும் தண்ணீரை திருப்பி விட வேண்டும் அல்லது சுத்திகரிக்கப்பட்ட நீரை விவசாயத்திற்கு அதிகமாக வழங்க வேண்டும் என்பதே இப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

## தூத்துக்குடி மாவட்ட அதிமுக நிர்வாகி ஆர்.சுதாகர் அதிமுகவில் இருந்து விலகி த.வெ.க.வில் இணைந்தார்



தூத்துக்குடி தெற்கு மாவட்ட அதிமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. சண்முகநாதனின் தீவிர விசுவாசியான ஆர்.சுதாகர், தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் முன்னாள் தலைவராகவும், அதிமுக அமைப்புசாரா ஓட்டுநரணி மாவட்டத் தலைவராகவும் பொறுப்பு வகித்து வந்தார்.

இந்நிலையில், அவர் அதிமுகவில் இருந்து விலகியுள்ளார். அவர், தவெக பொதுச்செயலாளரும் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.இந்நிகழ்வின் போது முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு,பி.திருச்சிற்றம்பலம் ஆகியோர் உடனிருந்தனர்.

கடந்தசட்டமன்றத்தேர்தலின் போது தூத்துக்குடி தொகுதியில் அதிமுக வேட்பாளராகஆர்.சுதாகர் தான் போட்டியிடுவார் என்று அவரது ஆதரவாளர்களால்பெரிதும்எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடைசி நேரத்தில்திடீரென முன்னாள் அமைச்சர்சி.த. செல்லப்பாண்டியன் தூத்துக்குடி தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இதனால் அதிமுக தலைமை மீது கடும் அதிருப்தியில் இருந்த சுதாகர், கட்சிப் பணிகளில் இருந்து சற்று ஒதுங்கியே இருந்தார். இந்த அதிருப்தியின் உச்சகட்டமாக தற்போது அவர் தவெகவில் இணைந்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் அதிமுகவின் முக்கிய நிர்வாகிகள் பலர் கட்சித் தலைமை மீது கடும் அதிருப்தியில் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. இதனால் அவர்கள் அடுத்தடுத்து மாற்றுக் கட்சிகளில் இணையத் திட்டமிட்டு வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு நேற்று (12.06.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை கையெழுத்திட்டு, துவக்கி வைத்தார்.

# பவள விழா கண்ட தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியின் வரலாற்றைத் தாங்கிய புத்தகமான MEMORABILIA வையும், கணினித் தரவுகள் அடங்கிய VOCC DIGITAL DIARY யையும் வெளியிட்ட திமுக தலைவர் மு.க. ஸ்டாலின்



1951இல் தூத்துக்குடி மாவட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் எளியவர்களும் தரமான கல்வியை பெற வேண்டும்என்றஉயரியநோக்கத்தோடும் ஆரம்பிக்கப்பட்டு, பவள விழா கண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க வ.உ.சி. கல்லூரியின் கடந்த 75 ஆண்டுகால கல்விச் சேவை பயணத்தையும், கல்விப் புரட்சி மற்றும் சமூக மாற்றத்திற்கான வ.உ.சி. கல்லூரியின் பங்களிப்பையும், மாணவ மாணவியரின் வளர்ச்சிக்காக கல்லூரி முன்னெடுத்த திட்டங்களையும் உள்ளடக்கிய MEMORABILIA என்ற புத்தகத்தையும், கல்லூரியின் கடந்த கால நினைவுகளை இக்கால தலைமுறைக்கு ஏற்ற வகையில் கணினித் தரவுகளாக புகைப்படங்கள் மற்றும் தகவல்கள் அடங்கிய VOCC DIGITAL DIARY -யையும் சென்னையில் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்! இந்நிகழ்வில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும் - திமுக துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி, முன்னாள் அமைச்சரும் - தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதாஜீவன், வ.உ.சி. கல்லூரி செயலாளர் ஏ.பி.சி.வி.சொக்கலிங்கம், வ.உ.சி. கல்வியியல் கல்லூரி செயலாளர் ஏ.பி.சி.வி. சண்முகம், கல்லூரி முதல்வர் சொ. வீரபாகு, ஏ.பி.சி.மகாலட்சுமி கல்லூரியின் செயலாளர் சுப்புலட்சுமி, வ.உ.சி. கல்லூரி பேராசிரியர்கள் முனைவர் ராதிகா, முனைவர் மீனாட்சி சுந்தரம், முனைவர் பட்சிராஜன், முனைவர் ஜாக்சன், கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர் ரோகித் ஆகியோரும் உடன் இருந்தனர்.



தென்காசி மாவட்டத்தின் சுற்றுலா தளமான குற்றாலத்தில் உள்ள அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கு தொடர்ச்சி வனப்பகுதியில் பெய்த கன மழையின்னல் குற்றாலத்தில் உள்ள பழைய குற்றாலம்புலிஅருவிமெயின்அருவிஆகியஅருவிகளில்வெள்ளப்பெருக்குஏற்பட்டதால் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதித்து மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது

### அந்தியூர் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள பொது மற்றும் இதர பிரிவினருக்கு

# தகுதியான பட்டாதாரர்கள் நில ஒப்படை வழங்கப்பட்டதற்கான அசல் நில ஒப்படைஆணை

## கலெக்டர் கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அந்தியூர் உள்ளிட்ட கிராமங்களில், 1950 - 1960 களில் பொது மற்றும் இதர பிரிவினருக்கு வழங்கப்பட்ட நிபந்தனைப் பட்டா பூமிகளுக்கான 'அ' பதிவேடு, கணினி சிட்டா ஆகியவற்றின் குறிப்பு கலத்தில் நிபந்தனை க்குட்பட்ட பட்டா என்பதை நீக்கம் செய்ய அரசாணை உரிய வழிகாட்டுதல்களுடன் வரப்பெற்றது. இதன்பின்னர் விண்ணப்பி க்கப்பட்ட 293 இனங்களுக்கு விதிகளின்படி நிபந்தனை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக தகுதியான பட்டாதாரர்கள் நில ஒப்படை வழங்கப்பட்டதற்கான அசல் நில ஒப்படை ஆணை, பதிவு பெற்ற ஆவணங்கள், பட்டா, சிட்டா, வில்லங்கச்சான்று மற்றும் இதர விபரங்களுடன் அந்தியூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் எதிர்வரும் 17.06.2026, 18.06.2026, 19.06.2026 மற்றும் 23.06.2026 ஆகிய நாட்களில் நடைபெற உள்ள வருவாய் தீர்வாயத்தில் விண்ணப்பிக்கலாம் எனவும், அரசு விடுமுறை அல்லாத பிற நாட்களில் தங்களுக்குதொடர்புடைய கிராம நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் அந்தியூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் மனுக்களை முழுவடிவில் பெறுவதற்கான பொறுப்பு அலுவலராகவும், தலைமையிடத்து துணைவ ட்டாட்சியர் ஒருங்கிணைப்பு அலுவலராகவும், பொதுமக்கள், தொடர்புடைய அலுவலர்களை அனுகி தங்களுக்கு தேவையான விபரங்களை பெற்றுக் கொள்ளலாம் என்பது இதன்மூலம் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.நியமனம் செய்யப்பட்டுள்ள விபரம் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்ட 510 கிலோ புகையிலைப்பொருட்கள் அழிப்புக் குழுவினரால் ஈரோடு மாநகராட்சி வெண்டிபாளையம் குப்பைக்கிடங்கில் முற்றிலும் அழிக்கப்பட்டன



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உத்தரவுப்படி தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, பான்பராக், கூல் லிப், ஹான்ஸ் போன்ற புகையிலை ப்பொருட்களை, காவல்துறையினர், உணவு பாதுகாப்பு துறையினர், உள்ளாட்சித்துறையினர், சுகாதாரத்துறை அலுவலர்கள் கூட்டாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தடையை மீறி விற்பனை செய்யும் கடைகள் மூடப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அறிவுறுத்தலின்படி ஈரோடு காவல் நிலையம் சரகத்திற்குட்பட்ட கடந்த ஜனவரி-2026 முதல் இதுநாள்வரையுள்ள ஈரோடு நகர காவல்துறை, மற்றும் உணவு பாதுகாப்புத்துறையால் கைப்பற்றப்பட்ட 488 கிலோ, இரயில்வே காவல்துறையனரால் கைப்பற்றப்பட்டு ஒப்படைக்கப்பட்ட 22கிலோ எடையுள்ள மொத்தம் 510 கிலோ தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் 11.06.2026 அன்று ஈரோடு மாநகராட்சி வெண்டிபாளையம் குப்பைக் கிடங்கில் மாவட்ட தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் அழிப்புக் குழுவினரான நியமன அலுவலர், உணவு பாதுகாப்புத்துறைகாவல்துறை, உள்ளாட்சித்துறை, பொது சுகாதாரத்துறை, வருவாய் துறை ஆகியோரின் முன்னிலையில் புகையிலைப்பொருட்கள் மீண்டும் பயன்படுத்த இயலாத வகையில் சேதப்படுத்தப்பட்டு 10 அடி ஆழம் குழிதோண்டிப் புதைத்து முற்றிலும் அழிக்கப்பட்டன.

மேற்படி தடைசெய்யப்பட்ட புகையிலைப்பொருட்கள் அழிப்பு நடவடிக்கையில் மாவட்ட நியமன அலுவலர் டாக்டர்.கு. வரலட்சுமி, உணவு பாதுகாப்பு அலுவலர்கள் எஸ். கேசவராஜ், சி. செல்வன், எம். முத்துகிஷ்ணன் மற்றும் மாவட்ட புகையிலைதடுப்பு ஆலோசகர் கே. கலைச்செல்வி, துப்புரவு ஆய்வாளர் கோகுல், கிராம நிர்வாக அலுவலர் ப.சரவணன், மொடக்குறிச்சி காவல் ஆய்வாளர் வி. ரவிக்குமார் கலந்து கொண்டனர்.

# கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதலை தடுக்க வேண்டும் அனைத்து மதத்தினரும் சகோதரத்துவத்துடன் ஒற்றுமையாக வாழ அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சிறுபான்மை மக்கள் உரிமைகள் இயக்கத்தின் பொதுக்குழுவில் தீர்மானம்

சிறுபான்மை மக்கள் மீதான மனித உரிமை மீறல்களைமத்திய, மாநில அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தூத்துக்குடியில் நடைபெற்ற சிறுபான்மை மக்கள் உரிமைகள் இயக்கத்தின் பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் அகில இந்திய ஜனநாயக சிறுபான்மை மக்கள் உரிமைகள் இயக்கத்தின் பொதுக்குழு கூடுகை நடைபெ ற்றது. இந்தக் கூட்டத்திற்கு இயக்கத்தின் தலைவர் எஸ்.ஜெயராஜ் தலைமை தாங்கினார். மாநிலத் துணைத்தலைவர் பி.எம்.மோசஸ், மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் ஜே.சாம்செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நிறைவேற்ற ப்பட்ட தீர்மான ங்கள்: எங்கு பார்த்தாலும் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருகின்றன; இவற்றைத்தடுத்து நிறுத்த நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். சிறுபான்மையினர் உரிமைகள்: சிறுபான்மை மக்கள், அதிலும் குறிப்பாகக் கிறிஸ்தவர்களுடைய உரிமைகள் அதிகளவில் மறுக்கப்பட்டு வருகின்றன. மாநில ஒருங்கிணைப்புச் செயலாளர் சாமிஜாண், மாநில துணைச் செயலாளர் அண்டோ மஸ்கர்ணாஸ், மாநில செய்தித் தொடர்பாளர் ஜேம்ஸ் நிக்கோலஸ் ராஜா, மாநில துணைச் செயலாளர் டாக்டர் மரிய கஸ்மிர் ராஜா, மாநில துணை பொதுச் செயலாளர் ராஜேஷ், மாநில பொருளாளர் ரதீஷ்குமார், மாநில இணைச்செயலாளர் ஜோஸ்வா நித்திய ராஜ், மாநில இளைஞரணி தலைவர் ஆனந்தன் மற்றும் மாநில மகளிரணி தலைவி சாந்தி ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தெற்கு மாவட்ட மண்டலத்தலைவர் ராஜா, தெற்கு மாவட்டத் தலைவர் வி. எஸ்.மோசஸ், மாவட்டத் தலைவர் அமலதாஸ், வடக்கு மாவட்ட மண்டலத் தலைவர் ஏ. சிலுவை ராஜா, வடக்கு மாவட்ட மண்டல செயலாளர் ஏ. சேவியர், வடக்கு மாவட்ட மண்டல துணைத் தலைவர் ஏ.ஆரோக்யம், வடக்கு மாவட்ட மண்டல பொருளாளர் ஜேசு பாலன், வடக்குமாவட்ட இளைஞரணி தலைவர் தொம்மை அந்தோணி, தெற்கு மாவட்ட இளைஞரணி தலைவர் ஏ. சாமுவேல்ராஜா, தெற்கு மாவட்ட செய்தித்தொடர்பாளர் ராபின்சன், வடக்கு மாவட்ட மகளிரணி தலைவி வழக்கறிஞர் எஸ். லூயிஷா, தெற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் அந்தோணி ராஜ் மற்றும் தெற்கு மாவட்ட துணைத் தலைவர் பர்னபாஸ் தங்கதுரை உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.





ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் உலக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு நேற்று (12.06.2026) அரச்சலூர் பேரூராட்சி அலுவலகத்தில் அனைத்து பணியாளர்கள் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (12.06.2026) ஈஞ்சம்பள்ளி, மகளிர் சுய உதவிக்குழுவினர்கள் பாரம்பரிய முறையில் களிமண்ணை பதப்படுத்தி மண்பாண்டங்கள் மற்றும் கைவினைப் பொருட்களை தயாரிக்கும் முறை குறித்து பார்வையிட்டு கலந்துரையாடினார்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



ஈரோடு மாவட்டத்தில் ஜவுளித் தொழில் அதிகளவு நடக்கிறது. கைத்தறி தொழிலையும், நெசவாளர்களையும் காப்பாற்றும் நடவடிக்கையாக, கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் உள்ளது. இதை அமல்படுத்த ஏதுவாக ஈரோடு மாவட்டம் சூரம்பட்டியில் அமலாக்கப் பிரிவு அலுவலகம் இயங்குகிறது.

கைத்தறிக்கு என பேட்டு, பார்டர் டிசைனில் பருத்தி மற்றும்பட்டுசேலை, வேட்டி, துண்டு, லுங்கி, பெட்ஷீட், டிரஸ் மெட்டிரியல், ஜமக்காளம், கம்பளிகள், ஷால், உல்லன் ட்வீட், மற்றும் சந்தர் உள்ளிட்ட 11 இரகங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன, மேற்படி இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வது கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டப்படி குற்றம் ஆகும்.

மேற்படி கைத்தறி இரகங்கள் விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படுவது குறித்து அமலாக்க ஆய்வுக் குழு மூலம் தினசரி ஆய்வு நடத்தி வருகின்றனர். ஆய்வின்போது தவறுகள் கண்டறியப்பட்டால் காவல் நிலையத்தில் புகார் செய்து நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்திருத்தப்படி ஜன் விஷ் வாஸ் (THE JAN VISHWAS-AMENDMENT OF PROVISIONS ACT, 2026) No.8 OF 2026, DATED.07.04.2026 மூன்று மாத சிறை அல்லது தறி ஒன்றுக்கு 10,000 அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்தோவிதிக்கப்படுகிறது. மேற்படி கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இரகங்கள் குறித்த விபரம் தேவை எனில், ஈரோடு அமலாக்க பிரிவு அலுவலகத்தை 0424-2275142 என்ற தொலைப்பேசியின் மூலம் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# 'Please find my brother': On day of Air India plane crash in Ahmedabad, the hour I spent with lone survivor



*One year ago, Air India Flight 171 fell out of the sky barely 30 seconds after takeoff, killing 241 of the 242 people on board and others on the ground. HT reporter, among the first journalists at the scene, spent that afternoon at Ahmedabad's Civil Hospital – and met the man in seat 11A. An account:*

*I was in Gandhinagar on the morning of June 12, 2025, waiting outside a senior government official's office for a meeting. His staff had asked me to wait a few minutes. While I waited, a news alert flashed on my phone about a plane crash in Ahmedabad. My editor called, and I told him I was heading to the scene. In that moment, the official's PA came out and said, 'I could go in.' I apologised and rushed out.*

*I couldn't make sense of it. My first assumption was that it must be a small aircraft, or that there had been some misunderstanding. Driving towards Ahmedabad, I made a few calls, and the misunderstanding I had hoped for dissolved quickly. It was Air India Flight AI-171, a Boeing 787-8 Dreamliner bound for London's Gatwick airport. The flight had gone down at 1.38 pm, barely half a minute after taking off from Sardar Vallabhbhai Patel International Airport. It was carrying 242 people – passengers and crew. Air India would later confirm that 169 of the 230 passengers were Indian nationals, 53 British, seven Portuguese and one Canadian.*

*I reached the spot around 2.45 pm. The aircraft had come down in Meghani Nagar, a densely populated residential neighbourhood less than two kilometres from the airport's runway. The area was swarming with police and security personnel, and thick smoke blocked the view.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.